# சைவகுருமார்கள்

(சைவ ஆச்சாரியர்)

- தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே - ஔவையார்

மாணிக்கவாசகர்

- பிறப்பு - பாண்டியநாட்டு திருவாதவூர் (மதுரை)
- பாண்டியநாட்டு மந்திரியாக பணியாற்றியவர்.
- திருப்பெருந்துறையில் திருவருள் பெற்றார்.
- திருவாதவூரார், கீழ்செழுமறை முனிவர் எனப்படுபவர் - மாணிக்கவாசகர்
- இவர் பாடிய நூல் - திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை, கீர்த்தி திருவகவல்.
- சிறப்பு - சிதம்பர பௌத்தர்களை வாதில் வென்றது, ஊமைப்பெண்ணை பேச வைத்தது.
- திருவாசகம் 600 பாடல்களும், திருச்சிற்றம்பலக்கோவை 400 பாடல்களும் உடையது.
- இவர் இறைவனுடன் ஐக்கியமான நாள் - ஆனி மாத மக நட்சத்திரம்.
- இவர் பொருட்டு இறைவன் நரிகளை பரிகளாக மாற்றினார், வைகையை பெருக்கோடச் செய்து, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பெற்றார். ஏடு கொண்டு மாணிக்கவாசகர் மொழிந்தவற்றை எழுதினார்.
- வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி என பாடினார்.
- பாவை பாடிய வாயால் கோவை பாடுக என மாணிக்கவாசகரை திருச்சிற்றம்பலக்கோவை பாடச் செய்தவர் - தில்லையம்பல பெருமான்.

## திருஞானசம்பந்தர்

- தந்தையார் - சீர்காழி சிவபாத இருதயர்.
- வேறுபெயர்கள் - திராவிடசிசு, ஆளுடையபிள்ளை, தோணிபுரத்தோன்றல், இன்தமிழ்ஏசுநாதர்
- 3 வயதில் அம்மையிடம் ஞானப்பால் உண்டார்.
- தேவாரம் அருளினார். வாழ்ந்த காலம் கி.பி.7-ம் நூற்றாண்டின் முற்பகுதி.
- திருக்கோலக்காவில் பொற்றாளம், திருவரத்துறையில் முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றார்.
- திருப்பாச்சிலாச்சிராமத்துறையில் மழவன் மகளின் முயலக நோய் தீர்த்தார்.
- பட்டீஸ்வரத்தில் முத்துப்பந்தல் பெற்றார்,
- திருவாடுதுறையில் பொற்கிழி பெற்று, திருமருகலில் பாம்பு கடித்த வணிகர் மகளை உயிர்பெறச் செய்தார்.
- திருவீழிமழலையில் படிக்காசு பெற்று, திருமறைக்காட்டில் (வேதாரண்யத்தில்) கதவை அடைக்கப் பதிகம் பாடினார்.
- கூன்பாண்டியனின் (நின்றசீர்நெடுமாறனின்) வெப்பு நோய் தீர்த்து, சமணரை வென்று, அக்னியில் தம் ஏடு வேகாமல் செய்து, வைகையில் நீரை எதிர்த்தோடும்படியும் செய்தார்.
- திருக்கொள்ளம்புதூரில் பதிகம் பாடி ஓடத்தை ஓடச் செய்தார்.
- திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக மாற்றினார்.
- மயிலையில் எலும்பை பெண்ணாக மாற்றினார்.
- திருநல்லூரில் பெருமணத்தில் மூலநட்சத்திரத்தில் முக்தி அடைந்தார்.
- திருக்கடைக்காப்பு என்பது - ஞான சம்பந்தர் எழுதிய முதல் 3 திருமுறைகள்.
- வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் - திருஞானசம்பந்தர்.

## திருநாவுக்கரசர் (அப்பர்)

- பிறப்பு - திருமுனைப்பாடி, வேளாளர் மரபு
- புகழனார் மற்றும் மாதினியாரின் மகன்
- வாழ்ந்த காலம் கி.பி.7-ம் நூற்றாண்டின் முற்பகுதி.
- இவரது தமக்கையார் - திலகவதியார். இயற்பெயர் - மருள்நீக்கியார்.
- இவரது வேறுபெயர்கள் - தாண்டகச்சதுரர், அப்பர், வாகீசர்.
- ஆரம்பத்தில் தருமசேனர் என்ற பெயரில் சமணசமயத்தில் இருந்தார்.
- சூலை நோயால் பாதிக்கப்பட்டு திருவதிகையில் தமக்கையிடம் வந்து சேர்ந்து, தேவாரம் பாடி நோய் நீங்கி சைவர் ஆனார்.
- இதனால் கோபமுற்ற மகேந்திரவர்ம பல்லவன் நீற்றறையில் வைத்தும், விஷம் கொடுத்தும், யானையை ஏவியும், கல்லில் பிணைத்து கடலில் தள்ளியும் இறையருளால் தப்பினார்.
- அப்பூதியார் மகனை பாம்பு தீண்ட, அதன் விஷம் நீக்கினார்.
- திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட கதவை பதிகம் பாடி திறந்தார்.
- திருவையாற்றில் கயிலைக் காட்சியை கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.
- திருப்புகலூரில் சித்திரை மாத சதய நட்சத்திர நாளில் முக்தி அடைந்தார்.
- என் கடன் பணி செய்து கிடப்பதே - இவரது பொன்மொழி
- உடம்பே கோயில் என்றார்.
- திருப்பாட்டு என்பது - திருநாவுக்கரசர் எழுதிய 4,5,6 திருமுறைகள்.

## சுந்தரர் (நம்பியாரூரர்)

- பிறப்பு - திருக்கையிலை திருநாவலூரில்
- சடையானர், இசைஞானியாரின் மகன்
- திருநெறித் தலைவர், நம்பியாரூரர், ஆளுடையநம்பி, தம்பிரான்தோழர் என அழைக்கப்படுபவர் - சுந்தரர்.
- வாழ்ந்த காலம் கி.பி.9-ம் நூற்றாண்டு
- திருமணநாளில் அடிமை ஓலையைக்காட்டி, இறைவன் இவரை ஆட்கொண்டான்.
- திருவதிகையில் இறைவன் திருவடி சூடப்பெற்றார்.
- ஆரூரில் பரவையாரை மணந்து, திருத்தொண்டர்தொகை பாடினார்
- பெரியபுராணத்தின் மூலம் என அழைக்கப்படுவது - திருத்தொண்டர்தொகை
- குண்டையூரில் நெல்மலை பெற்றார்
- திருப்புகலூரில் செங்கல்லை பொன்னாக்கினார்.
- திருமுதுகுன்றில் (விருத்தாசலம்) இறைவனளித்த பொன்னை ஆற்றிலிட்டார்.
- பின் அதனை திருவாரூரில் குளத்தில் எடுத்தார்.
- திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார். அதனால் ஏற்பட்ட பரவையாரின் ஊடலை இறைவனைத் தூது விடுத்து போக்கினார்.
- திருவையாறில் காவிரி நீர் வழிவிட பதிகம் பாடினார்.
- அவினாசியில் முதலை வாயில் அகப்பட்ட பிள்ளையை மீட்டார்.
- ஆடி மாத சுவாதி நாளில் வெள்ளையானையில் அமர்ந்து சேரனுடன் கயிலை சென்றார்.

- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என மூவர் அருளிய திருப்பதிகங்களாகிய தேவாரத்தின் வேறுபெயர் - மூவர் தமிழ்.
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் எனும் மூவருடன் மாணிக்கவாசகரும் சேர்த்து அருளிய தேவார திருவாசகங்களின் தொகுப்பின் வேறுபெயர் - தமிழ்மறைகள்.
- சைவ சமயகுரவர்கள் (சைவ சமய ஆசிரியர்கள்) என அழைக்கப்படுபவர்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்
- சைவ சமய குரவர்கள் அருளிய தமிழ்மறைகளுக்கு ஆறுமுகநாவலர் இட்ட பெயர் தமிழ்வேதம்
- பித்தா பிறை சூடி பெருமானே அருளாளர் என பாடினார்.
- தில்லை வாழ் அந்தணர் அடியார்க்கடியேன் என சிவன் அடியெடுத்து கொடுக்க சுந்தரர், திருத்தொண்டர்தொகை பாடினார்.

## சைவாச்சாரியார்கள்

- முக்கியமானவர்கள் - நீலகண்டாச்சாரியார், கச்சியப்பசிவாச்சாரியார், வாகீசமுனிவர்.
- நீலகண்டாச்சாரியாரின் வேறுபெயர் - ஸ்ரீகண்டாச்சாரியார்
- நீலகண்டாச்சாரியாரின் கொள்கை - சிவாத்துவிதம்
- மதாச்சாரியர்கள் என அழைக்கப்படுபவர்கள் - சங்கரர், இராமானுஜர், மத்துவர். இவர்கள் மூவர் ஆக்கிய மதங்களின் மறுபெயர் - திரிமதம்(மும்மதம்)
- கந்தபுராணத்தை இயற்றியவர் - கச்சியப்ப சிவாச்சாரியார் (11ம் நூற்றாண்டு இறுதி)
- வாகீச முனிவர் தங்கியிருந்த மடத்தின் பெயர் - சதுரானன பண்டித மடம் (திருவொற்றியூர்), 12ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தார்.
- ஞானாமிர்தம் என்ற மருத்துவ நூல் எழுதியவர் - வாகீச முனிவர்.

## பிற அடியார்கள்:

- சிதம்பர நடராஜருக்கு தொண்டுசெய்யும் அந்தணர் - தில்லைவாழ் அந்தணர்கள் (3,000 பேர்கள்)
- திருநீலகண்டர் - பரத்தைபால் காமுற்றுபின் மனைவியால் அறிவுபெற்று இறைவனை நாடினார்.
- இயற்பகை நாயனார் - இறைவன் விபூதி தரித்த காமுகனாக வந்து இவர் மனைவியை கேட்க இவர் கொடுக்க இறைவன் ஆட்கொண்டான்.
- இளையான்குடி மாறர் - இம்மை செல்வமனைத்தும் அடியார்க்கு அருளினார்.
- மெய்பொருள் நாயனார் - சிவனடியார் போன்று வேடமணிந்த முத்திநாதன் கத்தியால் குத்திய போதும் தொழுது நின்றார்.
- சிறுதொண்டர் - மகனை அமுதாக இறைவனுக்கு அளித்தார்.
- கண்ணப்பர் - இறைவனுக்காக இரு கண்களையும் வழங்கினார்.
- சேரமான்பெருமாள் - யானைப்பவனியின் போது வெண்ணிறமேனியாய் உவர் சுமந்த வண்ணானை இறைவனாக வணங்கினார்.
- புகழ்சோழர் - சிவகாமி ஆண்டவரது பூக்கூடையை யானைப் பறித்து எறிந்தது.
- மாணக்கஞ்சாளர் - மணப்பெண்ணான தன் மகளின் கூந்தலை அறுத்து அடியார்க்கு கொடுத்தார்.
- திருநாளைப்போவார் - திருபுன்கூரில் இறைவனருளால் நந்தி விலக தரிசனம் செய்து, சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் தரிசனம் காண வந்து இறைஜோதியில் கலந்தார்.
- அப்பூதியடிகள் - திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தும், மகனுக்கு பாம்பு தீண்டியும் குருவுக்கு அமுதூட்டினார்.
- ஏயர்கோல்கலிராமர் - சுந்தரர் இறைவனை தூதுவிடுத்ததை அறிந்து வெகுண்டு, தனது சூலை நோயைத் தீர்க்க சுந்தரர் வருவதையறிந்து, தன் வயிற்றை தானே கிழித்துக் கொண்டார்.

------****-----****----